**<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>**
<u>MCOP No: 14/2022</u>

2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ம் நாள் Rw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | திரு.கதிரவன் |
| த.க.பெயர் | சுப்பிரமணியம் |
| கிராமம் | சிறப்பு உதவி ஆய்வாளர், பெருந்துறை |
| மாவட்டம் | ஈரோடு |
| வயது | 47 |

**<u>எம.சா.1 நாள் 21 .11.2025</u>**

**<u>முதல் விசாரணை:</u> (சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை செய்யப்படுகிறார்)**

நான் பெருந்துறை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றுகிறேன். நீதிமன்றத்தில் இருந்து அனுப்பப்பட்ட அழைப்பாணையில் பெருந்துறை காவல் நிலைய கு எண் 91/2021 வழக்கு சம்பந்தப்பட்ட காவல் நிலைய விசாரணை ஆவணங்கள் கோரப்பட்டிருந்தது. அழைப்பாணை பேரில் மேற்படி வழக்கு தொடர்புடைய பார்வை மகசர், மாதிரி வரைபடம், மோட்டார் வாகன ஆய்வறிக்கை(2 எண்ணிக்கை) மற்றும் குற்ற இறுதியறிக்கை (2 எண்ணிக்கை)முன்னிலைபடுத்துகிறேன். அவை **எமசாஆ 1** வரிசை. மேற்படி வழக்கில் முதல் தகவல் அறிக்கை ஈச்சர் லாரி ஓட்டுநர் மீது பதிவு செய்யப்பட்டுள்ளது. விசாரணை முடிவில் இரு சக்கர வாகனத்தை ஓட்டி சென்ற இளவரும் விபத்திற்கு காரணம் என இளவர் மீது தனியாக சிறார் நீதிமன்றத்தில் ஒரு குற்ற அறிக்கையும், பெருந்துறை குற்றவியல் நீதிமன்றத்தில் ஈச்சர் வாகன ஓட்டுநர் மீது ஒரு குற்ற அறிக்கை என இரண்டு குற்ற பத்திரிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>குறுக்கு விசாரணை (மனுதாரர் தரப்பில்)</u>**

வரைபடத்தில் தென்வடல் தார் ரோட்டின் மேல்புறம் விபத்து நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இரு சக்கர வாகனம் தெற்கிலிருந்து வடக்கு நோக்கியும் ஈச்சர் வாகனம் வட்கிகிலிருந்து தெற்கு நோக்கி வந்ததாகவும் குற்ற இறுதியறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால சரி. ஈச்சர் வாகன

ஓட்டுநர் தான் விபத்திற்கு காரணம் என்றால் அது பற்றி என்னால் சொல்ல இயலாது. ஈச்சர் வாகன ஓட்டுநரை காப்பாற்றுவதறக்ாக தான் விபத்திற்கு இரு சக்கர வாகன ஓட்டுநர் மற்றும் ஈச்சர் வாகன ஓட்டுநர் காரணம் என குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது குறித்த என்னால் சொல்ல இயலாது, அது விசாரணை அதிகாரியின் முடிவு ஆகும். இரு சக்கர வாகன ஓட்டுநர் விபத்திற்கு காரணம் இல்லை என்றால் அது குறித்தும என்னால் சொல்ல இயலாது. இரு சக்கர வாகனத்திற்கு வலது புறம் தான்சேதங்கள் ஏற்பட்டுள்ளது என்றால் அது பற்றி என்னால் சொல்ல இயலாது. இரு சக்கர வாகன ஓட்டுநர் இளவர் என்பதை நிருபிக்க அவரின் பிறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் அது பற்றி என்னால் சொல்ல இயலாது. இரு சக்கர வாகன ஓட்டுநர் இளவர் அல்ல என்றும் அவர் இளவராக இருந்திருந்தால் அது குறித்த ஆவணங்கள் முன்னிலைபடுத்தியிருப்போம் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED

Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2025.11.21 13:34:37 -1000

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS